செ.வெ.எண். 81 நாள் : 30.08.2017

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
## திருநெல்வேலி வீட்டு வசதி பிரிவு

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு ஓர் நற்செய்தி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு மாதாந்திர தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும் நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு ஐந்து மாதம் மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து, அரசு ஆணை (நிலை) எண். 104 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நி.எ.3 (1) ) துறை, நாள். 15.06.2017ன் மூலம் அரசு ஆணை வழங்கியுள்ளது.

அரசு அளித்துள்ள இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி, திருநெல்வேலி வீட்டு வசதிப் பிரிவிற்குட்பட்ட பின்வரும் திட்டங்களில் சங்கரபேரி SMT வீடுகள், வி.மு.சத்திரம் வீடுகள், வல்லன்குமாரன்விளை வீடுகள், நாராணம்மாள்புரம் மனைகள், குலவணிகர்புரம் மனைகள் ஆகிய திட்டங்களில் தவணைமுறையின் மூலம் மனை/வீடு ஒதுக்கீடு பெற்றவர்களில் ஏற்கனவே, முழுத் தொகையும் செலுத்தியவர்கள் நீங்கலாக ஏனைய ஒதுக்கீடுதாரர்கள் மட்டும் வட்டி தள்ளுபடி போக மீதம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை, ஒரே தவணையில் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இச்சலுகையானது ஒரு வருட காலத்திற்கு மட்டும் நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்,
திருநெல்வேலி வீட்டு வசதிப் பிரிவு.

---

// பிரசுரத்திற்கு அல்ல//

28/8/17

செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்,
திருநெல்வேலி வீட்டு வசதிப் பிரிவு.

வெளியீடு

29.8.17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்